

தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று (10.11.2025) சென்னை மேயர் இராதாகிருஷ்ணன் ஹாக்கி விளையாட்டரங்கில் 14ஆவது ஆடவர் ஹாக்கி இளையோர் உலகக் கோப்பை போட்டியின் சின்னமான காங்கேயனை அறிமுகப்படுத்தினார். இந்நிகழ்வில் அமைச்சர் பி.கே.சேகர்பாபு, மேயர் ஆர்.பிரியா, தயாநிதி மாறன் எம்.பி. தமிழச்சி தங்க பாண்டியன் எம்.பி., இ.பரந்தாமன் எம்.எல்.ஏ., துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அருவிய மிஸ், ஆணையத்தின் உறுப்பினர் செயவர் ஜெ. மேகநாத ரெட்டி, சர்வதேச வராக்கி சம்மேளனத் தலைவர் டத்தோ தயாப் இக்ரம். இந்திய ஹாக்கி சங்க செயலாளர் போலாநாத் சிங், பொருளாளர் சேகர் ஜெ.மனோகரன், இயக்குநர் (பொஹ் கமாண்டர் ஆர்.கே. ஸ்ரீவத்சவா உள்பட அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## சென்னை மாநகரப் போக்குவரத்துக் கழகத்துக்கு விருது!

# அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கருக்கு பாராட்டு!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் சமூக வலைதளப் பதிவு!

சென்னை, நவ. 11–

இந்தியாவிலேயே சிறந்த பொதுப் போக்கு வரத்து அமைப்பைக் கொண்ட நகரம் என விருது பெற்றுள்ள MTC Chennaiக்கும், துறைக்குப் பொறுப்பேற்று வழிநடத்தும் போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர் அவர்களை யும் பாராட்டி முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளப் பதிவு வெளியிட் டுள்ளார்.



இது குறித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர் கள் வெளியிட்டுள்ள சமூக வலை தளப் பதிவு வருமாறு:–

**A city's living standards are reflected in the reliability and quality of its public transport.**

**இந்தியாவிலேயே சிறந்த பொதுப் போக்கு வரத்து அமைப்பைக் கொண்ட நகரம் என விருது பெற்றுள்ள MTC Chennai க்கும், துறைக்குப் பொறுப்பேற்று வழிநடத்தும் போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் எஸ்.எஸ்.சிவ சங்கர் அவர்களுக்கும் பாராட்டுகள்!**

**Last Mile Connectivity, நள்ளிரவிலும் பாது காப்பான பயணம், Digital பயணச்சீட்டு முறைகள், தாழ்தள மின்சாரப் பேருந்துகள் என நாளுக்கு நாள் மெருகேறி வரும் MTC, பயணிகளின் தேவையறிந்து, சீரான இடைவெளியில் தொடர்ந்து பேருந்துகளை இயக்கிச் சிறந்திட வாழ்த்துகிறேன்!**

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது வலைதளத்தில் பதிவிட்டுள்ளார்.




தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று (10.11.2025) திருவல்லிக்கேணி பார்த்தசாரதி சுவாமி திருக்கோயில் சார்பில் திருவல்லிக்கேணி, நல்லத்தம்பி தெருவில் 2.06 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள அலுவலர்களுக்கான குடியிருப்புகளை திறந்து வைத்து, ஒதுக்கீட்டு ஆணைகளை வழங்கினார். இந்நிகழ்வில் அமைச்சர் பி.கே. சேகர்பாபு, மேயர் ஆர்.பிரியா, கூடுதல் தலைமைச் செயலாளர் மருத்துவர் க. மணிவாசன், ஆணையர் பி.என்.ஸ்ரீதர், மாவட்டச் செயலாளர் நே. சிற்றரசு, ஏ.ஆர்.பி.எம். காமராஜ், எஸ்.மதன் மோகன் மற்றும் அலுவலர்கள் உடனிருந்தனர்.



தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் முனைவர் பழனிவேல் தியாகராஜன் நேற்று (10.11.2025) எல்காட் நிறுவனத்தின் சார்பில் தமிழ் நாட்டின் பல்வேறு இடங்களில் 50 புதிய நிரந்தரஆதார் சேவை மையங்களையும், 79 பள்ளி முகாம்களையும் காணொலிக்காட்சி வாயிலாக தொடங்கி வைத்தார்.





சென்னை மேற்கு - தென்மேற்கு மாவட்ட மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி